


THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

**2005**
**நவம்பர்**

ஆசிரியர்
B. அர்ஜுனன்

மரம் 5 கனி 12

## 20வது வாசகர் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள்

புதுக்கோட்டையில் ஒரு புதுமை




ஜீவஊற்று உம்மிடத்தில் இருக்கிறது; உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம் *(சங்கீதம்36:9).*

### தமிழகத்தை கிறிஸ்துவின் வசனத்தால் நிரப்புவோம்

*ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது (மத்5:3)*


## கிறிஸ்துவின் சபையார் வழங்கும்
## கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி


உங்கள் WIN TV யில் ஒவ்வொரு புதன் கிழமையும் காலை 6.00 முதல் 6.30 மணிவரை காணத்தவறாதீர்கள்

மற்றும்

உங்கள் வானொலியில் இலங்கை வானொலி (கொழும்பு சர்வதேச வானொலி ஒலிபரப்பு) MW 873 Khz-ல் ஒவ்வொரு வியாழக்கிழமை காலை 7.15 முதல் 7.30 மணிவரை கேட்கத்தவறாதீர்கள்

செய்தி மற்றும்
**ArjunGlory**
தம்பதியரின் கேள்வி நேரம்





### *கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் (ரோமர்16:16)*

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
# THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 5 நவம்பர் - 2005 கனி - 12


ஆசிரியருரை

## விக்கிரகம் - Idol



விக்கிரகங்களும், விக்கிரக வழிபாடுகளும் எப்படி உலகத்தில் தோன்றினது என்பதைக் குறித்து நாம் ஆராய்ந்து பார்க்கையில் ஆதியிலே தேவனோடு பேசிவந்த மனிதன் நாளடைவில் பாவத்தின் விளைவால் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டான். பாவம் உலகத்தில் பிரவேசித்தது. பாவத்தின் கீழாக்கப்பட்ட மனிதன் பாவத்திற்கு அடிமையானான். பாவம் (அதாவது) பிசாசு சத்தியத்திற்கு விரோதமான போதனைகளையும், எண்ணங்களையும் மனிதனில் விதைக்க ஆரம்பித்தான் "பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்" (1யோவா.3:8). இதற்கு கீழ்ப்படிந்த மனிதன் இயற்கைகயை வணங்கவும், மிருகங்களை வணங்கவும், சந்திர சூரிய நட்சத்திரங்களை வணங்கவும், கடல்வாழ் சந்துக்களை வணங்கவும், ஊரும் பிராணிகளை வணங்கவும் ஆரம்பித்தான் என்று வரலாற்று பாட நூட்களிலும் படிக்கலாம். ஆதியிலே தேவனோ மனிதனைப் பார்த்து: "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்" (ஆதி.1:28). ஆனால் மனிதனோ அவைகளை விக்கிரகங்களாக செய்து அதை நமஸ்கரித்துக் கொண்டுவருகிறான். தேவன் ஏற்படுத்திய

அனைத்தும் அவனுக்கு ஏதாவது ஒருவகையில் பயனுள்ள தாகவே இருக்கிறது. அவனோ அவைகளை உண்டாக்கிய தேவனை விட்டு விலகி, தேவனால் உண்டாக்கப்பட்டவைகளை தொழுது கொள்ள ஆரம்பித்தான். இப்படியே விக்கிரகங்களும், விக்கிரக வழிபாடுகளும் பூமியில் தோன்ற ஆரம்பித்தது.

பரிசுத்த வேதாகமத்தில் பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதும்போது "உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லை யென்றும் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம்" (1கொரி.8:4) என்கிறான். உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லை அதற்கு ஜனங்களே கன்த்தைக் கொடுத்துவைத்திருக்கிறார்கள். கண்ணைக் கெடுத்துவிடும் கையைவாங்கிவிடும், என்று சொல்லி ஜனங்களை பயமுறுத்தி திவைத்திருக்கிறார்கள். வேதம் அதைக்குறித்து தெளிவாக சொல்கிறது: "விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது; அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது, அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது, அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது, அவைகளுக்குக் கைகளிருந்தும் தொடாது; அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது; தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது. அவைகளைப் பண்ணுகிறவர்களும் அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப் போலவே இருக்கிறார்கள்" (சங்.115:4-8). விக்கிரகத்திற்கு எல்லாமே இருந்தும் அவைகளால் ஒன்றும் செய்யமுடியாது. இதை அநேகர் மறுப்பர். அதற்கு சக்தி இருக்கிறது என்பர். இப்படி நினைக்கக்கூடியவர்களில் பெலிஸ்தியர்களும் அடங்குவர். அவர்கள் ஒருமுறை கர்த்தருடைய பெட்டியை இஸ்ரவேலரிடமிருந்து பிடித்து அதை தங்களுடைய தாகோனின் கோவிலிலே தாகோனண்டை வைத்தார்கள். மறுநாள் காலமே எழுந்திருந்து வந்து பார்க்கும்போது தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்தது. அப்பொழுது அவர்கள் தாகோனை எடுத்து அதை அதின் ஸ்தானத்திலே திரும்பவும் வைத்தார்கள். மறுநாள் காலமே எழுந்து பார்க்கும்போது இதோ, தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்ததுமல்லாமல், தாகோனின் தலையும் அதின் இரண்டு கைகளும்

வாசற்படியின்மேல் உடைபட்டுக் கிடந்தது: தாகோனின் உடல் மாத்திரம் மீதியாயிருந்தது. தேவனுக்கு முன்பாக அவர்கள் உண்டாக்கின கல்லும் மரமும் எம்மாத்திரம்! "தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்த மேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக் குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே" (2கொரி.6:16). சம்பந்தமில்லாத ஒன்றை தேவனோடு சம்பந்தப் படுத்தக் கூடாது. பெலிஸ்தர் தாகோனின் விக்கிரகத்தோடு கர்த்தருடைய பெட்டியை சம்பந்தப்படுத்தி இதுவும் தேவனுடைய பெட்டி நம் தேவனுடைய கோவிலில் வைப்போம் என்று சொல்லி வைத்திருக்கக்கூடும். அங்கே பெட்டிக்கு முன்பாக விக்கிரகம் உடைந்தது. நாமே அவருக்கு ஆலயம் நம்மில் தேவன் வாசம் செய்கிறார் நமக்குள்ளே உலாவிகிறார் என்று வாசிக்கின்றோம். நம்மோடு உலாவி உறவாடும் தேவன் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம் பண்ணார்.

சாலொமோன் தேவனுக்காக பெரிய ஆலயத்தை எருசலேமில் கட்டினான். அதை கட்டிமுடித்து ஜெபிக்கும்போது "இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?" (1இரா.8:27) என்று ஜெபித்தான். ஆம், கர்த்தர் எவ்வளவு பெரியவர். அவருக்கு நிகராக இப்பூமியிலும் வானத்திலும் எதையும் நாம் ஒப்பிடலாகாது. உலக சம்பத்தையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும் பெற்றவன் சாலொமோன், இவனைப்போல ஒரு ராஜா இவனுக்கு முன்னும் பின்னும் எழும்பினதில்லை. இப்படிப்பட்ட சாலொமோன் கடைசியிலே விக்கிரகாராதனை செய்கிறவனாக மாற்றப்பட்டான். ஏன்? எப்படி? என்று கேட்கிறீர்களா? அவனுடைய இச்சையே இதற்கு காரணம். அந்நிய ஸ்திரீகள் மீது ஆசைவைத்தான். அந்தப் பெண்கள் அவன் இருதயத்தை வழிவிலகச் செய்தார்கள். கர்த்தர் இஸ்ரவேலை முன்னமே எச்சரித்திருந்தார். "நீங்கள் அவர்களண்டைக்கும் அவர்கள் உங்களண்டைக்கும் பிரவேசிக்கலாகாது; அவர்கள் **நிச்சயமாக** தங்கள் தேவர்களை பின்பற்றும்படி உங்கள் இருதயத்தைச் சாயப்பண்ணுவார்கள் என்று சொல்லியிருந்தார்; சாலொமோன் அவர்கள்மேல்

ஆசைவைத்து, அவர்களோடு ஐக்கியமாயிருந்தான்" (1இரா.11:2). எனக்கு அன்பானவர்களே உங்களுடைய ஐக்கியம் யாரோடு உள்ளது? "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப் படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது" (2கொரி.6:14,15). இப்படிப்பட்ட எச்சரிப்பின் சத்தம் கொடுக்கப்பட்டிருக்கும்போது அதையும் மீறி நான் அவர்களை என்பக்கம் மாற்றிவிடுவேன், திருமணத்திற்கு பின்பு கர்த்தரை ஏற்றுக்கொள்வார்கள் என்றெல்லாம் பகல் கனவு காண்பது தவறு. சாலொமோனை அந்தப் பெண்கள் தங்கள் தேவர்களுக்காக மேடைகளைக் கட்டும்படி செய்தார்கள். அந்த ஸ்திரீகளைப் பிரியப்படுத்த அவனும் மோளோகுக்கு மேடைகளைக் கட்டி தேவ கோபத்திற்கு ஆளானான். எப்படி என்றால், "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டு முறை தரிசனமாகி, அந்நிய தேவர்களைப் பின்பற்ற வேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தும், அவன் கர்த்தரை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி, அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளாமற் போனதினால் கர்த்தர் அவன்மேல் கோபமானார்" (1இரா.11:9,10).

விக்கிரகஆராதனை பாரம்பரியமாகவும், தொன்று தொட்டும் வந்து கொண்டிருக்கிறது. அதிலிருந்து விடுபட சிலர் முயற்சிக்கின்றனர். அநேகர் அது பாரம்பரியமான ஒன்று அதை நாம் மாற்றலாகாது என்கின்றனர். "இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரை மறந்து கோவில்களைக் கட்டுகிறான்" (ஓசி.8:14)) என்பதைப் போல் இருக்கிறது. முதலாவது தன்னை உண்டாக்கினவரை மறந்தவன் யார்? நம் முற்பிதாக்கள் அல்லவா? அவர்கள் தேவனை மறந்து விக்கிரகங்களை ஏற்படுத்தி நமஸ்கரிக்க ஆரம்பித்தனர். உதாரணமாக மோசே காலத்தில் மோசே தேவனோடு மலையில் பேசி விட்டு வர தாமதித்தபோது ஜனங்கள்ஆரோனை நோக்கி எங்களுக்காக தெய்வங்களை உண்டுபண்ணும் என்று சொல்லி ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து அதை நமஸ்கரித்தார்கள். இப்படி தேவனை விட்டு பிரிந்த கூட்டத்திலிருந்து வந்தவர்கள் தான் நாமும். ஆனால் இன்று அக்கூட்டத்தை விட்டு வெளியேற நாம் யோசிக்கிறதென்ன? நம் தேவன் அன்றே கற்பித்திருக்கிறாரே!

“கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்ன வென்றால், நான் வானத்திலிருந்து உங்களோடே பேசினேன் என்று கண்டீர்கள். நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே தெய்வங்களையும் பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம். மண்ணினாலே பலிபீடத்தை எனக்கு உண்டாக்கி, அதின்மேல் உன் ஆடுகளையும் உன் மாடுகளையும் சர்வாங்க தகனபலியாகவும் சமாதானபலியாகவும் செலுத்துவாயாக; நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்” *(யாத்.20:22-24).* இப்பொழுது நாம் ஆடு மாடுகளை பலியிட வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் கிறிஸ்துவே நமக்காக பலியாகிவிட்டார். ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுகிறோம். இன்று நாம் செய்ய வேண்டுவதென்ன அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் படியாக ஜெபக்குழுக்களை ஏற்படுத்தலாம், உங்கள் வீடுகளில் கூடியிருந்து வேதம் வாசித்து ஜெபித்து கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தலாம். உங்கள் வீட்டு சுவர்களில் வசனத்தை எழுதி அநேகர் வாசித்து பயன்பெறும்படி செய்யலாம். இப்படி செய்யும்போது உன்னை கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

அநேகருக்கு விக்கிரகத்தின் மீது நம்பிக்கையிருக்கிறது. அது அற்புதம் செய்கிறது என்று சொல்லி நம்புகின்றனர். வேதம் இதைக்குறித்து சொல்வதைக் கவனியுங்கள்: *“உங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசியாகிலும், சொப்பனக்காரனாகிலும் எழும்பி; நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றி, அவைகளைச் சேவிப்போம் வாருங்கள் என்று சொல்லி, உங்களுக்கு ஒரு அடையாளத்தையும் அற்புதத்தையும் காண்பிப்பேன் என்று குறிப்பாய்ச் சொன்னாலும், அவன் சொன்ன அடையாளமும் அற்புதமும் நடந்தாலும், அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார் (பரீட்சிக்கிறார்)” (உபா.13:1-3).* இது தான் உண்மை. மற்றபடி ஒன்றுமில்லை. மோசே கோலைப் போட்டவுடன்

பாம்பாயிற்று அப்போது எகிப்தின் மந்திரவாதிகளும் அப்படியே செய்தார்கள். இருந்தபோதிலும் மோசேயின் கோல் மந்திரவாதிகளின் கோல்களை விழுங்கிப்போட்டது. பிரியமான வர்களே தேவனுக்கு முன்பாக எந்த மந்திரமும் மாயமும் செல்லாது. ஆகையால் அவைகளை நம்பி ஏமாந்து போய்விடா திருங்கள். வானத்திற்கும் பூமிக்கும் மேலான கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுங்கள். "இப்பொழுதும் இஸ்ரவேலே, நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு பயந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து, அவரிடத்தில் அன்பு கூர்ந்து, உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவித்து, நான் இன்று உனக்குக் கற்பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் உனக்கு நன்மையுண்டாகும்படி கைக் கொள்ளவேண்டும் என்பதையே அல்லாமல், வேறே எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்" *(உபா.10:12,13)*. பிரியமானவர்களே, தேவன் மனிதர்களுடைய கைகளினால் பணிவிடை ஏற்றுக்கொள்கிறதில்லை. அவருடைய கற்பனை களையும் கட்டளைகளையும் கைக்கொள்ளவேண்டும் என்றே எதிர்பார்க்கிறார். உங்களை முழுமையாக அவருக்கு ஒப்புக் கொடுத்து அவரைத் தொழுது கொள்ளுங்கள். "பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள் வீர்களாக. ஆமென்" *(1யோவா.5:21)*.


**வத்தலக்குண்டு வேதாகமக்கல்லூரி**

ஒருவருடப்பயிற்சிக்கு மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. கீழ்க்கண்ட மாவட்டங்களிலிருந்து மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். (ஆண்டவருக்கு ஊழியம் செய்யவிருப்பமுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)

நீலகிரி, கடலூர், விருதுநகர். (குறைந்த இடங்களே உள்ளன)

கல்வி தகுதி: 10-ம் வகுப்பு, ஆண்களுக்கு மட்டும், போதனை தமிழ் ஆங்கிலம் வழி.

பயிற்சி காலம் ஒரு வருடம். உணவு உறைவிடம் இலவசம்.

பயிற்சி காலம் முடிந்தவுடன் உங்கள் பகுதியிலே கர்த்தருக்கு ஊழியம் செய்ய ஓர் அருமையான வாய்ப்பு (பயிற்சி காலங்கள் டிசம்பர் 05 முதல் டிசம்பர் 06முடிய)


விண்ணப்பித்து பின்பு, அனுமதிபெற்று வரவும்.

போன்: 04543 - 263278 அல்லது செல்: 9443558041 ***நிர்வாகி***

# ஏன் கிறிஸ்துவின் இரத்தத்தில் வல்லமை உண்டு?

## Why There is Power in the Blood of Christ?

*J.C.Choate*



இரத்தத்தைப் பற்றி சில ஜனங்களுக்கு நல்ல அபிப்ராயம் இருக்காது. இது துண்டிக்கப்படுதல், காயம் அல்லது மரணத்தைக் கூட சுட்டிக்காண்பிக்கலாம். மத உலகில் சிலர் தங்களுடைய அகராதியில் இரத்தம் என்ற அந்த வார்த்தையை நீக்கிவிட முயற்சிக்கின்றனர்.

பழைய ஏற்பாட்டின் காலங்களில் தேவன் மிருகபலிகள் அல்லது இரத்த பலிகளை மனிதனுடைய பாவத்திற்கு நிவாரணமாகக் கேட்டார். இரத்தம் மிகவும் முக்கியமானது. ஏனென்றால் இரத்தத்தில் ஜீவனிருப்பதால் இது ஜீவனைக் குறிக்கிறது. இந்தக் காரணத்திற்காக, இரத்தம் சாப்பிடுதல் தவறென விலக்கப் பட்டிருக்கிறது. "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவர்த்தி செய்கிறது இரத்தமே. அதினிமித்தம் உங்களில் ஒருவனும் இரத்தம் புசிக்க வேண்டாம்; உங்கள் நடுவே தங்குகிற அந்நியனும் இரத்தம் புசிக்கவேண்டாம் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன்" (லேவி.17:11,12) என வாசிக்கிறோம். பழைய உடன்படிக்கையுங்கூட இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டது. "எப்படியெனில், மோசே, நியாயப்பிரமாணத்தின்படி, சகல ஜனங்களுக்கும் எல்லாக் கட்டளைகளையும் சொன்ன பின்பு, இளங்காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டுமயிரோடும், ஈசோப் போடுங்கூட எடுத்து, புஸ்தகத்தின் மேலும் ஜனங்களெல்லார் மேலும் தெளித்து தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன் படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான். இவ்விதமாக,

கூடாரத்தின் மேலும் ஆராதனைக்குரிய சகல பணிமுட்டுகளின் மேலும் இரத்தத்தைத் தெளித்தான். நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும். இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" (எபி.9:19-22) என்று எபிரெய ஆசிரியர் சொல்கிறார். மேலும் எபிரெய ஆசிரியர், பிரதான ஆசாரியர் வருஷத்திற்கொரு முறை இரத்தத்தோடே மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து, "..... அந்த இரத்தத்தைத் தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான்" (எபி.9:7). அதன்பின் எபிரெய எழுத்தர் "அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யமாட்டாதே" என முடிக்கிறார் (எபி.10:4).

மிருகங்களின் பலிகள் சிறந்த ஆடாகவும், குற்றமற்றதாக அல்லது ஊனமற்றதாகவும் இருந்தபோதிலும் அவைகள் அசைவற்றவைகள், ஆனால் மிருகங்கள். ஆனபடியினால் ஒரு குற்றமற்ற பலி தேவைப் பட்டது. மிருகங்களின் இரத்தம் அந்த குற்றமற்ற பலியின் இரத்தத்தை மாதிரியாக காண்பித்தது. ஆனால் மிருகங்கள் பாவத்தை நிவர்த்தி செய்யமுடியாத படியினாலும், மனிதன் தாமே பாவியாக இருந்தபடியினால், தன்னையும் மற்றவர்களையும் இரட்சிக்க முடியாதபடியினாலும், அதன்பின் அந்த குற்றமற்ற பலியாக யார் தன்னை அர்ப்பணிக்க முடியும்? ஆனால் ஒருவர் இருந்தார், ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே அவர். அவர் பாவஞ் செய்யவில்லை என்று பேதுரு கூறுகிறார் (1பேது.2:2). ஏனென்றால் அவர் பாவமற்றவாராய் வாழ்ந்தார், நியாயப்பிரமாணத்தைக் குற்றமற கைக்கொண்டவராக, சோதனைக்கு இணங்காதவராக, அதன்பின் அவர் உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையின் மேல் மரிக்க தகுதியுடையவராக இருந்தார்.

கிறிஸ்துவின் இரத்தத்தை வலியுறுத்திக் கூறுகிற சில பாடல்களை நாம் பாடுகிறோம். "இரத்தத்தில் வல்லமையுண்டு" என்ற ஒரு பாடலை நாம் பாடுகிறோம். இன்னொன்று, "எது என்னுடைய பாவத்தைன் கழுவ முடியும்? இயேசுவின் இரத்தத்தைத் தவிர வேறொன்றும் இல்லை" என்கிறது. அந்த வார்த்தைகள் எவ்வளவு உண்மையானவைகள்!

இரட்சிக்கக் கூடாத அநேகக் காரியங்கள் உள்ளன.

ஏற்கனவே குறிப்பிட்ட, மிருகங்களின் இரத்தம் நம்மை இரட்சிக்காது. நியாயப்பிரமாணம்கூட நம்மை இரட்சிக்காது. அவை ஜனங்களை கிறிஸ்துவினிடத்தில் மட்டுமே கொண்டுவந்து சேர்க்கிறது. பவுல், "அப்படியிராதபடியால், இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய் பாவத்தின்கீழ் அடைத்துப் போட்டது. ஆதலால் விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல் பண்ணப்பட்டிருந்தோம். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே" *(கலா.3:22-25)*. நியாயப்பிரமாணத்தின் கிரியையினால் நாம் இரட்சிக்கப்பட முடியாது என்பது மட்டுமல்ல, நம்முடைய சுயக் கிரியைகளினாலும் நாம் இரட்சிக்கப்படமுடியாது. இதைக்குறித்து பவுல், "ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிற வர்களும், பலவிதஇச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப் பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும், ஜீவனம் பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத் தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம். நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்க தாக, அவர் தமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மூலமாய், அந்த பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்" *(தீத்.3:3-7)* என்கிறான்.

பேதுரு நாம் வெள்ளி மற்றும் பொன்னினாலான பொருட்களினால் நாம் மீட்கப்பட்டு அல்லது இரட்சிக்கப் பட்டவர்களாய் இருக்கவில்லை என நமக்குப் போதிக்கிறான்

அவன் கூறுவதை கவனியுங்கள், “ உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே” (1பேது.1:18,19) என்கிறான். மனிதன் இவ் வாழ்வின் மூலம் தனக்கு வேண்டியவற்றை வாங்கவோ அல்லது லஞ்சம் கொடுக்கவோ இயலும் ஆனால் அவன் இரட்சிப்பை வாங்க முடியாது. தான் இரட்சிக்கப்படும்பொருட்டு கர்த்தருக்கு அவன் லஞ்சம் கொடுக்கவும் முடியாது. ஆனபடியினால் நாம் அழிவுள்ள பொருட்களின் மேல் நம்பிக்கை வைக்காமல் ஞானமுள்ளவர்களாய் நடப்போம். கடைசியாக, மனித மதங்களும், கோட்பாடுகளுக்குக் கீழ்ப்படிதலும், மற்றும் மனுஷருடைய கட்டளைகளும் ஒருவனை பரலோகம் கொண்டு செல்லாது. கிறிஸ்து, “மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்........ என்றார்” (மத்.15:9). மேலும் பவுல் கூறும்போது பிரிவினைகளை உண்டாக்குகிறவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யவில்லை என்கிறான் (ரோம.16:17,18).

பாவிகளாய் இருக்கையில், நாம் இரட்சிப்படும்படிக்கு ஒரே ஒரு வழி மாத்திரமே உண்டு, அது தம்முடைய இரத்தத்தைச் சிந்திய கிறிஸ்துவின் தியாகத்தின் மூலமே ஆகும். வேதவாக்கியங்களில் கிறிஸ்துவின் இரத்தத்தின் முக்கியத்துவத்தை விளக்குகின்ற பல கூற்றுகள் உள்ளன. பவுல் இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் தேவனோடு ஒப்புரவாக்கப் பட்டிருக்கிறோம் அல்லது நாம் தேவனின் சிநேகிதர்களாக மாறுவதற்கு தகுதியடைந்திருக்கிறோம் என்றான். அவன், “சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று” (கொலோ.1:19,20) என்கிறான். பவுல் எபேசு கிறிஸ்தவர்களுக்கு, முன்னே தூரமாயிருந்த அவர்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள்

கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானார்கள் என்றான். யூதர்களையும் புறஜாதியாரையும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக்கி தம்முடைய மரணத்தினாலே பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, அதாவது அவர்களைப் பிரித்துவைத்திருந்த பழைய பிரமாணத்தை நீக்கினார் என்று விளக்குகிறான்.

கிறிஸ்துவையும் அவருடைய இரத்தத்தையும் பற்றி பேசுகையில், பவுல் எபேசு கிறிஸ்தவர்களுக்கு, "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபே.1:) என்று எழுதினான். கொலோசெய சபை கிறிஸ்தவர்களுக்கு, (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" (கொலோ.1:14) என்றான். கிறிஸ்து கர்த்தருடைய பந்தியை ஆரம்பிக்கையில், இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது (மத்.26:28) என்றான். கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டிருக்கிறவர்கள் கர்த்தருடைய சபையில் சேர்க்கப் பட்டுள்ளனர் (அப்.2:47). மேலும் எபேசுவில் சபை மூப்பர்களுக்கும் பவுல் கூறினபோது, "உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (அப்.20:28) என்றான்.

கிறிஸ்துவின் இரத்தத்தைக் குறித்தும், அது எதற்காக சிந்தப்பட்டது என்பது குறித்தும், அதிலுள்ள வல்லமையைக் குறித்தும் அதிகமாகக் கூற முடிந்தது, ஆனால் வேதவாக்கியங்களின் மூலம் ஏற்கனவே நாம் வாசித்திருக்கிறவற்றின் சாராம்சத்தைக் காண்போமாக.

1. கிறிஸ்து குற்றமற்ற பலியாக, மனிதனுடைய பாவங்களுக்காக இரத்தம் சிந்தி சிலுவையின் மேல் மரித்தார்.

2. கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டதின் மூலம், பழைய பிரமாணம் நீக்கப்பட்டு, அவருடைய இரத்தத்தினாலே புதிய உடன்படிக்கை முத்திரையிடப்பட்டது.

3. நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே இரட்சிக்கப் பட்டிருக்கிறோம். கீழ்ப்படிதல் மூலம் அந்த இரத்தத்தினிடத்தில்

வந்து சேருகிறோம். வேறு வார்த்தையில், ஒருவன் இரட்சிக்கப்படும்படிக்கு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்து, தன் பாவங்களுக்காக மனந்திரும்பி, அவரே தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு, இரட்சிக்கப் படும்படிக்கு அல்லது பாவங்கள் மன்னிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் (தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டு) பெற வேண்டும் என கிறிஸ்து அறிவித்தார் (மாற்.16:16; அப்.2:38). ஒருவன், கர்த்தருக்குக் கீழ்ப்படிவதன் மூலம், தண்ணீர் முழுக்கினால் கிறிஸ்துவின் இரத்தத்தோடு ஐக்கியப்படுகிறான், கர்த்தருடைய மரணத்தின் பலனை அடைகிறான். இது கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவங்களற கழுவப்படுதலாகும். இதை ரோமர் 6-ல் வாசிக்கிறோம். மேலும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள் எனச் சொல்லப்பட்டபோது, பவுல் எழுந்து, பிறகு அவன் ஒரு விசுவாசியாக மாறி, தன் பாவங்களுக்காக மனந்திரும்பி, கர்த்தரை ஏற்றுக்கொண்டு அதன் பின் அவன் தன்னுடைய பாவங்கள் கழுவப்பட்டது என்று உறுதிப்படுத்தப்பட்டான். இதன் சரியான வசனத்தை நாம் வாசிக்கலாம், "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்" (அப்.22:16). பின்பு, அப்போஸ்தலர்2:38-ல் பேதுரு திரளான ஜனங்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்றான். அவர்கள் அவனுடைய வார்த்தையைக் கேட்டு அவ்வாறே செய்தார்கள், கர்த்தர் அவர்களை இரட்சித்து அவர்களைத் தம்முடைய சபையில் சேர்த்துக்கொண்டார் (அப்.2:47). எனவே, ஒருவன் இரட்சிக்கப்பட விரும்பினால் அவன் விசுவாசித்து, மனந்திரும்பி, கிறிஸ்துவை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும், இதை அவன் செய்வதன் மூலம், அவன் கிறிஸ்துவின் இரத்தத்தினிடத்தில் சேர்ந்து அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

4. கர்த்தருடைய சபை கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கிரயத்துக்குக்கொள்ளப்பட்டது. ஆனபடியினால், இது இரத்தக்கிரயமானதும், மிகவும் முக்கியமானதுமாகும். நாம் கர்த்தருக்குச் சொந்தமாகும்படிக்குக் கட்டாயமாக அதனுடைய

அங்கத்தினராயிருக்க வேண்டும்.

5. கிறிஸ்துவின் ஒளியில் ஒருவன் நடக்கையில் அல்லது அவருடைய சித்தத்தின்படி, அதாவது அவருக்கு உண்மையாக இருக்கின்ற போது கிறிஸ்துவின் இரத்தம் தொடர்ந்து அவனைக் கழுவுகிறது.

6. கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ளும்படி வாரத்தின் முதல் நாள் தோறும் கூடி, கிறிஸ்துவின் சரீரத்தையும், அவருடைய இரத்தத்திற்கு மாதிரியாக வைக்கப்பட்டுள்ள திராட்சபழரசத்தையும் நினைவு கூரவேண்டும். இது நாம் இரட்சிக்கப்படும்படிக்கு கிறிஸ்துவின் தியாகத்தை நினைவுகூர நமக்கு உதவுகிறது.

என்னுடைய நண்பரே, கிறிஸ்து உனக்காக மரித்தார். உன்னுடைய பாவங்கள் மன்னிப்பப்படும்படிக்கு அவர் தம்முடைய இரத்தத்தை சிந்தினார். நீங்கள் அவரை விசுவாசிக்கிறீர்களா? அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறீர்களா? நீங்கள் இவ்வாறில்லாவிட்டால், இதை நீங்கள் செய்யும்படிக்கு உங்களை ஊக்கப்படுத்த விரும்புகிறோம். உங்களுக்காக கர்த்தர் ஏற்படுத்தியிருக்கிற இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளத் தவறும் போது எவ்வளவு வெட்கமாயிருக்கும்!

**அஞ்சல் வழி வேதாகம கல்வி பயின்ற ஒரு மாணவியின் கடிதம்**

**Praise the Lord**

**கிறிஸ்துவின் சபை,**
வத்தலக்குண்டு.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரர் அர்ஜுனன் சகோதரி குளோரி அவர்களுக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். "**ஒரே வழி**" என்ற புத்தகத்தை என் சிநேகிதியிடம் பெற்று இந்தத் தொடர்கல்வியை கற்றுக் கொண்டதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரத்தையும் தாங்களின் இந்த ஊழியத்திற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

மிக எளிமையான தமிழ் நடை மொழியில் ஆறு பகுதிகளைக் கொண்ட இந்த "ஒரே வழி" வேதபாடங்கள் சத்தியத்தை நன்றாக அறியவும், அநேகருக்கு சத்தியத்தை விளக்கிச் சொல்லுமளவு தெளிவான பதில்கள் இருப்பதால் மிகவும் எங்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தது. இந்தப் பாடத்தை வடிவமைக்க தாங்கள் எடுத்த எல்லா முயற்சிகளுக்கும் தேவன்தாமே தாங்களையும், குடும்பத்தையும் ஊழியங்களையும் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக.

இப்பவும் இந்த ஆறு பாடங்களின் பதில்களும் தாங்களின் முகவரிக்கு அனுப்புகிறேன். மற்றும் ஏதாவது வேதத்தைப் பற்றிய புத்தகங்கள் கிடைக்குமாயின் நலமாக இருக்கும்.

நன்றி

தங்கள் அன்புள்ள

*A. Pushpam Amirtharaj*

# வேதாகம ஆலோசனை

**"இவைகள் பேதைகளுக்கு வினாவையும்,
வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும்.
புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான்;
விவேகி நல்லாலோசனைகளை அடைந்து; நீதிமொழியையும்,
அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும்,
அவர்கள் உரைத்த புதை பொருள்களையும்
அறிந்துகொள்வான்"(நீதி.1:4-6)**

**வேதாகம ஆராய்ச்சி பாடம்-2**

**1. சத்தியத்தை விசுவாசி:**

"விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோம.10:17). விசுவாசம் ஒரு மனிதனுக்குள் எப்படிவருகிறதென்றால் அவன் தேவனுடைய வசனத்தைக் கேள்விப் படுகிறதினாலே வருகிறது. அப்படி வந்த விசுவாசத்தைக் காத்துக் கொள்கிறவர்கள் "... அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன்கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்" (லூக்.8:15) என்று இயேசு சொல்கிறார். வசனம் சத்தியமாயிருக்கிறது, அந்த வசனத்தை நீங்கள் விசுவாசித்து ஏற்று, அதை உங்கள் இருதயத்தில் வைத்து, அதைக்குறித்து சிந்தனைசெய்து, அவைகளுக்கு ஏற்றபடி உங்களை மாற்றி அமைத்துக் கொண்டு வாழ முற்படவேண்டும்.

"சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" (ரோம.1:18). இன்றைக்கு உண்மையை மூடிமறைக்க முயற்சிக்கிறார்கள். ஆனால் சத்தியம் என்றும் சத்தியமாகவே இருக்கிறது. அதை ஒரு மனிதனாலும் ஒழித்துவிட முடியாது. அதை அழிக்க எண்ணங்கொண்டவர்களோ அழிந்து போனார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு விரோதமாக தேவகோபம் நிலைநிற்கிறது. ஆகையால் "சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்" (2தெச.2:11,12).

நீங்கள் யாரை மற்றும் எதை விசுவாசிக்கிறீர்கள்? இயேசுவையும் அவருடைய வசனத்தையும் விசுவாசியுங்கள். இயேசு சொல்கிறார்: "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவா.6:47) என்கிறார். நீங்கள் சத்தியபரராகிய இயேசுவை விசுவாசிக்கும்போது நித்திய வாழ்வை பெற்றுக்கொள்வீர்கள். "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக் கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" (யோவா.3:36). இன்றே சத்தியத்தை விசுவாசித்து தேவகோபத்திற்கு உங்களை தப்புவித்துக்கொள்ளுங்கள்.

## பேசும் வேதாகமம் : 12

1. பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் எதிலும் கட்டப்பட்டிருக்கும்? – பரலோகத்திலும் – மத்.18:18.
2. .....வாங்குகிறதைப் பார்க்கிலும் எதுவே பாக்கியம்....? – கொடுக்கிறதே – அப்.20:35.
3. நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவஞ்செய்யலாமா? – கூடாதே – ரோம.6:14.
4. நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் என்னசெய்யப்படோம்? – நியாயந்தீர்க்கபடோம் – 1கொரி.11:31.
5. நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் யாரல்லவே? – கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே – கலா.1:10.
6. நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தை என்ன செய்து கொள்ளுங்கள்? – பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் – எபே.5:16.
7. என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் எதிலே நிறைவாக்குவார்? – மகிமையிலே – பிலி.4:19.
8. சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் எப்படியுள்ளவர்களாயிருக்கிறீர்கள்? – பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள் – கொலோ.2:10.
9. சகோதரரே, நீங்கள் நன்மை செய்வதிலே என்னவாகாதிருங்கள்? – சோர்ந்துபோகாமலிருங்கள் – 2தெச.3:13.
10. மற்றவர்களுக்குப் பயமுண்டாகும்படி, பாவஞ்செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாக என்ன செய்? – கடிந்துகொள் – 1தீமோ.5:20.

## பொது அறிவுச் சோதனை

1. இந்தியாவின் முதல் பெண் வெளியுறவுத் துறை செயலாளராக நியமிக்கப்பட்டவர் யார்?
அ)கோகிலா அய்யர் ஆ)அரிதா கவுர் இ)துர்கா பானர்ஜி
2. மத்திய கிழக்கு ரெயில்வேயின் தலைமையிடம் எது?
அ)ஜெய்ப்பூர் ஆ)ஜபல்பூர் இ)மும்பை
3. அமெரிக்காவில் அடிமைத்தனத்தை நீக்கியவர் யார்?
அ)ரூஸ்வெல்ட் ஆ)ஜார்ஜ் வாஷிங்டன் இ)ஆபிரகாம் லிங்கன்
4. சீனாவின் காகித நாணயம் எது?
அ)பிசோ ஆ)லிரா இ)யூவான்
5. உலகிலேயே தொழிற்சாலை அதிகம் உள்ள நகரம் எது?
அ)ஹாங்கோள ஆ)டோக்கியோ இ)வாஷிங்டன்

விடைகள்: 1.கோகிலா அய்யர் 2.ஜபல்பூர் 3.ஆபிரகாம் லிங்கன் 4.யுவான் 5.டோக்கியோ

# தேவனுடைய வார்த்தை சுருக்கிக் கூறப்பட்டுள்ளது
# God's Word Summarized



இந்த புத்தகம் வெளிப்படுத்துகிறது
தேவனுடைய மனதை,
மனிதனுடைய நிலையை,
இரட்சிப்பின் வழியை,
விசுவாசிகளின் மகிழ்ச்சியை

இதனுடைய கோட்பாடுகள் பரிசுத்தமானவை,
இதனுடைய கற்பனைகள் பரிசுத்தமானவை,
இதனுடைய வரலாறுகள் உண்மையானவை,
இதனுடைய தீர்ப்புகள் மாறாதவை

வாசி இதை ஞானமடைய,
விசுவாசி இதை இரட்சிப்படைய,
பயிற்சிசெய் இதை பரிசுத்தமடைய.

இது கொண்டுள்ளவைகள்:
ஒளி உன்னை வழிநடத்த,
போஜனம் உன்னை போஷிக்க,
ஆறுதல் உன்னை உற்சாகப்படுத்த.

இது வழிப்போக்கனின் வரைபடம்,
புனித பயணியின் ஆதாரம்,
விமானியின் திசைகாட்டி,
படைவீரனின் வாள்,
கிறிஸ்தவனின் கதாபாத்திரம்
இங்கே
பரதீசு முன்நிலையில் வைக்கப்பட்டுள்ளது,
பரலோகம் திறக்கப்பட்டுள்ளது,
நகரத்தின் கதவுகள் மூடப்பட்டிருக்கவில்லை.

கிறிஸ்து இதனுடைய மிகப்பெரிய சராம்சம்,
நம்முடைய நன்மை இதனுடைய வரிவடிவம்
தேவனுடைய மகிமை இதனுடைய முடிவு

இது

மனதை நிரப்பும்,
இதயத்தை ஆளும்,
கால்களை நடத்தும்

இதை வாசி
நிதானமாக,
அடிக்கடி,
ஜெபத்தோடு.

இது
ஒரு செல்வத்தின் சுரங்கம்,

ஒரு மகிமையின் பரதீசு,
ஒரு இனிமையின் நதி.

இது
வாழ்வில் உனக்குக் கொடுக்கப்பட்டுள்ளது,
நியாயத்தீர்ப்பிலே திறக்கப்படும்,
என்றென்றும் நினைக்கப்படும்.

இது
சம்பந்தபடுகிறது மாபெரிய பொறுப்போடு
வெகுமதியளிக்கிறது மிகப்பெரிய உழைப்பிற்கு
கண்டிக்கிறது இதன் பரிசுத்தக்காரியங்களை
அசட்டைப் பண்ணுகிறவர்களை.

**-The Voice of Truth International.**

# "ஸ்தானத்தை விட்டு விடாதே"

*A. Viji*



இந்த நிலையில்லா உலகில் மனிதனின் வாழ்க்கை எப்படிப்பட்டதாக உள்ளது? பொதுவாக மனிதன் அழுதுகொண்டே பிறக்கிறான்; பிறரை குறைகூறிக் கொண்டே வாழ்கிறான்; ஏமாற்றத்துடன் மரணத்தை காண்கிறான். வேத வசனம் கூறுகிறது "தன் கூட்டைவிட்டு அலைகிற குருவி எப்படியிருக்கிறதோ, அப்படியே தன் ஸ்தானத்தை விட்டு அலைகிற மனுஷனும் இருக்கிறான்" (நீதி.27:8).

முதலாவது மனிதனுக்கு மூன்று விதமான கட்டுப்பாடுகள் தேவை.1. உடல் கட்டுப்பாடு 2. மனக் கட்டுப்பாடு 3. ஒழுக்கக் கட்டுப்பாடு. உங்கள் உடலைப் போன வழியில் விட்டுவிட்டால் அது உங்களை உதவாக்கரையாக்கிவிடும். இதற்கு என்ன செய்வது? "துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்" (ரோம.13:14).

எப்போதும் முதல் தரமாகவே சிந்தியுங்கள். இரண்டாந்தர எண்ணங்களால் உங்கள் மனதை நிரப்பவேண்டாம். நிகழ்காலத்தில் சிக்கி விடாதீர்கள். உங்களின் நிகழ்காலம் எவ்வளவு முக்கியமற்றதாக வேண்டுமானாலும் இருக்கட்டும், உங்கள் எதிர்கால ஆத்தும வாழ்வை பற்றி சிந்தியுங்கள்.

மனிதன் தன் நிலையை மறந்தால், தன்னையே இழந்த நிலையில் காணப்படுவான். ஏனென்றால் மனிதனின் மனதில் ஆவியானவர் தங்கியிருக்கிறார். வசனம் கூறுகிறது "ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார், தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்" (1கொரி3:17). எனவே, நீங்கள் உங்கள் ஸ்தானத்தை விட்டு விடாமல் பரலோக வாழ்வில் ஆத்துமா என்றென்றும் வாழ உங்களை ஒப்புக்கொடுங்கள். கர்த்தர் உங்கள் அனைவரையும் காப்பாராக!

பெண்கள் பகுதி

## ராகாப் புதிய ஏற்பாட்டில் ஏன் நினைவுகூரப்படுகிறாள்?

## Why she was remembered in New Testament?

*J.Glory Arjunan*



பாவமான வழியில் நடந்து கொண்டிருந்த வேசியான ராகாப் தேவனைக் குறித்தும் தேவனுடைய வல்லமையைக் குறித்தும் அறிந்திருந்தாள். யோசுவா, எரிகோ பட்டணத்தை வேவுபார்க்கும்படி இரண்டு மனுஷரை அந்த தேசத்திற்கு அனுப்பினான். அப்போது இந்த வேசியான ராகாப் இஸ்ரவேலரின் சேனை தம்முடைய பட்டணத்தைப் பிடிக்க வரப்போகிறதே என்று எண்ணி கலக்கம் அடைந்திருந்தாள். "கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக் கொடுத்தாரென்றும். உங்களைப் பற்றி எங்களுக்குத் திகில் பிடித்திருக்கிறதென்றும், உங்களைக் குறித்து தேசத்துக் குடிகள் எல்லாரும் சோர்ந்து போனார்களென்றும் அறிவேன். நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது; கர்த்தர் உங்களுக்கு முன்பாகச் சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப்போகப்பண்ணினதையும், நீங்கள் யோர்தானுக்கு அப்புறத்தில் சங்காரம்பண்ணின எமோரியரின் இரண்டு ராஜாக்களாகிய சீகோனுக்கும் ஓகுக்கும் செய்ததையும் கேள்விப்பட்டோம். கேள்பட்டபோது எங்கள் இருதயம் கரைந்து போயிற்று, **உங்கள் தேவனாகிய கர்த்தரே உயரவானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்"** (யோசு.2:9-11) என்று சொல்லி வேவு பார்க்க வந்த இஸ்ரவேல் மனுஷருக்குப் பட்டணத்தைப் பிடிக்க உதவினாள்.

ஆம் தான் வசித்து வந்த பட்டணத்தைப் பிடிக்க மற்ற ஜனங்களுக்கு உதவினாள். காரணம் என்ன தெரியுமா? இஸ்ரவேல் ஜனங்களுடைய தேவனாகிய கர்த்தரின் வல்லமைகளை அறிந்திருந்தாள். சேனைகளின் கர்த்தர் ஜெயபலமானவர் என அறிந்திருந்தாள். அது மாத்திரமல்ல கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தன்னுடைய தேசத்தை ஒப்புக்கொடுத்தாரென்றும், தங்களுடைய இருதயம் கரைந்து போயிற்று, தைரியமும் அற்றுப்போயிற்று, உங்கள் தேவனாகிய கர்த்தரே உயரவானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர், இவரே தன்னையும் தன் குடும்பத்தையும் இரட்சிக்கவல்லவர் என விசுவாசித்தாள். இவள் ஒரு வேசி. எல்லாராலும் அற்பமாகவும் அருவருப்பாகவும் கூட எண்ணப்பட்டிருப்பாள். ஆனால் இவளோ கர்த்தரே உயர

வானத்திலும், கீழே பூமியிலும் தேவனானவர் அறிக்கையிட்டாள். கர்த்தருடைய செயல்களை நினைத்து கலக்கமடைந்தவளாயுமிருந்தாள். பயந்து நடுங்கி அத்தோடு அழிந்து போனாளா? இல்லை. அவள் எப்போது கர்த்தருடைய வல்லமையை அறிந்து அவரே தேவன் என அறிக்கையிட்டாளோ, அப்போதே அவள் கிரியை நடப்பிக்க ஆரம்பித்தாள். ஆம், அவள் வெறுமனே கர்த்தரே தேவன் என விசுவாசிக்கப்படவில்லை, தன்னுடைய விசுவாசத்தை தன் கிரியையில் காண்பித்தாள். 'விசுவாசத்தினால் ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடேகூடச் சேதமாகா திருந்தாள் என எபி.11:31 கூறுகிறது.

அநேகர் கர்த்தர் பெரியவர், அவர் வல்லவர் அவர் ஒருவரே தேவன் என்றெல்லாம் விசுவாசிக்கின்றனர். ஏன் கர்த்தருக்குப் பயப்படுகின்றனர்! ஆனால் கீழ்ப்படிவதில்லை. அன்பு சகோதரியே, "தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லது தான்: பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன" (யாக்.2:19). அன்றைய நாளில் ராகாபின் இருதயம் மட்டும் கரைந்து போகவில்லை. எரிகோ பட்டணத்தார் அனைவரின் இருதயங்களும் கரைந்து போயின. கீழ்ப்படியாதவர்கள் சேதமடைந்தார்கள். ஆனால் ராகாபோ தன்னுடைய குடும்பத்தாரோடுங்கூட காக்கப்பட்டாள். இதை வாசிக்கிற சகோதரியே உங்கள் குடும்பமுழுவதும் காக்கப்பட இவளைப்போல விசுவாசித்து கிரியை நடப்பித்து இரட்சிக்கப்படுங்கள். கிரியையில்லாத விசுவாசம் செத்தது. இவள் சந்ததியில் பரிசுத்தராகிய இயேசு வந்தார் (மத்.1:5). இவளுடைய கிரியையுள்ள விசுவாசத்தினால் புதிய ஏற்பாட்டில் இடம்பெற காரணமானாள்.

### வேதஅறிவுப்போட்டி எண் 62-ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. துக்கிப்பு | -பிர.7:3 | 6. அவைகளின் முடிவு மரணமே | -ரோ.6:21 |
| 2. அல்லவே | -கலா.2:17 | 7. சஞ்சலப்படுத்துகிறதில்லை | -புல.3:33 |
| 3. சபிக்கப்படுவான் | -ஏசா.65:20 | 8. நாற்பதுபேருக்கு | -அப்.23:13 |
| 4. தீர்ப்பு சொல்லாதிருங்கள் | -1கொரி.4:5 | 9. சாவான் | -எசே.33:9 |
| 5. பாபிலோன் ராஜா | - ஏரே.39:7 | 10. பவுல் | -1கொரி.6:12 |

### ஜெபியுங்கள்

- புதுக்கோட்டையில் 20வது கருத்தரங்கை கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காக...
- இம்மாதமுதல் வெளிவருகிறதான டி.வி மற்றும் ரேடியோ செய்தி ஊழியத்திற்காக...
- உலகத்தின் பல பகுதிகளில் புயல், நிலநடுக்கம், சூறாவளி, போன்ற பாதிப்புகளால் தங்கள் குடும்பங்களையும் உடைமைகளையும் இழந்தவர்களுடைய குடும்ப ஆறுதலுக்காக...

# சந்திப்போம்! சிந்திப்போம்!

**உரையாடல் - 38**

D.எபிநேசர்

*தாவீது:* Welcome யோனத்தான்! உன்னையும் உன் கேள்விகளையும் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்!

யோனத்தான்: ஸ்தோத்திரம் தாவீது! உன் உற்சாகமான வரவேற்புக்கு மிக்க நன்றி. என்ன இன்னைக்கு ரொம்ப உற்சாகமா இருக்கிற மாதிரி தெரியுது!

*தாவீது:* இருக்காதா பின்னே! வேத வசனங்களை எடுத்துச் சொல்றதும் கேட்கிறதும் மனசுக்கு உற்சாக மானதுதானே! வெளி1:3-ல் வாசிக்கிறபடி "இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள் என்று எழுதியிருக்கிறதே!

யோனத்தான்: நிச்சயமாக! சரி விஷயத்துக்கு வருவோம். நாம் தொழுகையில் உள்ள அம்சங்களைப் பற்றி தொடர்ந்து பேசலாம் என்று நினைக்கிறேன். எப்படிப் பாடுவது, எப்படி ஜெபிப்பது என்பதைப் பற்றியெல்லாம் வசனத்தின்படி எனக்கு நன்றாய் புரியவைத்தாய்!

*தாவீது:* பிரசங்கத்தைப் பற்றிக் கூட நாம் பேசியாகிவிட்டது என்று நினைக்கிறேன்

யோனத்தான்: இல்லையில்லை. இன்னும் அதுபற்றி நிறைய கேள்விகள் என்னிடம் இருக்கிறது. அதில் முதல் கேள்வி தொழுகையில் பிரசங்கம் அவசியமா என்பதுதான்.

*தாவீது:* ஏன் திடீரென்று இப்படியொரு கேள்வியைக் கேட்கிறாய்? ஏதாவது மோசமான பிரசங்கத்தை சமீபத்தில் கேட்டுவிட்டாயா?

யோனத்தான்: அதற்காக இல்லை. வேத வாக்கியங்களை வாசிப்பதே போதுமானதாக இருக்கும் அல்லவா? அதுவே நமக்கு புரியக்கூடிய நடையில் தானே இருக்கிறது. இவர்கள் பிரசங்கிக்கிற பேர்வழி என்று, தங்கள் சொந்தக் கதைகளை அளந்து கொண்டிருக்கிறார்களே!

*தாவீது:* உண்மையாகவே மிகச் சிறந்த, சிந்திக்கத்தூண்டும் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறாய் யோனத்தான்! இதற்கு வேதம் என்ன சொல்கிறது என்பதை, கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்த சந்திப்பில் பார்ப்போம்.

**Good Bye யோனத்தான் (மீண்டும் சந்திப்போம்)**

வாலிபர் பகுதி

# அன்பு யாரிடமிருந்து வருகிறது?

*T.Christy Kumar*



அன்பான வாசக உள்ளங்களே, நாம் ஒவ்வொருவரும் அன்பாயிருக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். எனெனில் தேவன் பட்சபாதமில்லாமல் எல்லா உயிர்களிடத்தில் அன்பு செலுத்துகிற வராக உள்ளார். அன்பு அவரிடத்திலிருந்து உண்டாயிருக்கிறது. இதை 1யோவான்4:7-ல் வாசிக்கின்றோம். "பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். நாம் ஒவ்வொருவரும் அன்பாகவே இருக்க ஆசைபடுகிறோம் உண்மைதானே! சில சமயங்களில் அன்பு செலுத்த ஏதுவில்லாமல் போகிறது. ஆதிமுதலே அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது என்று 1யோவான்3:11-ல் வாசிக்கின்றோம். அந்த அன்பு நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கவேண்டும். அன்பில்லாதவன் தேவனை அறியான். அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிகிறான். இதை நாம் மத்தேயு எழுதின சுவிசேஷ புத்தகத்தில் 5:5-ல் சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். கொடூரகுணமுள்ள மனிதனும் அநேகபாவங்களைச் செய்கிற மனிதனும் அன்பு கொள்ளும் போது தேவனால் சந்திக்கப்பட்டு புதிய மனிதனாக மாற்றப்பட்டு தன் பழைய குணங்களிலிருந்து விடுவிக்கப்படுகிறான்.

நாம் கடனாளிகள் எவ்விதத்தில்? ஒருவரிடத்தில் பெற்ற பொருளுக்காக, பணத்துக்காக கடன்பட்டிருக்கிறோம். வேண்டாத வீணான காரியங்களை செய்வதற்கு தங்களை கடனாளிகளாக பாவித்து கொண்டிருக்கிறவர்களையும் பார்க்கிறோம் இவ்விதமான கடனாளிகள் தாங்கள் நிம்மதியோடு வாழ்கிறார்களா என்றால், இல்லை. என்றுதான் அநேக சமயங்களில் கூறமுடியும். ஒருவன் இவ்வுலக செல்வங்களை எல்லாம் பெற்றவனாக இருந்தாலும் ஏதாவது ஒரு வகையில் கடன் பட்டவனாக இருந்தால், மன சஞ்சலத்தோடு தான் வாழ்கிறான். அளவுக்கதிகமாக ஆசைப்பட்டு கடனிலிருந்து மீளமுடியால் சமாதானமான வாழ்க்கை வாழ முடியாமல் தற்கொலை செய்து கொள்ளும் முடிவுக்கு சென்றுவிடுகிறான்.

இவ்விதமான அழிவுக்குரிய கடனாளிகளாய் இருங்கள் என்று நம் மீது அன்பு கூர்ந்த இயேசு கூறவில்லை. மாறாக, அன்பு கூர்வதிலும் ஜீவனைக் கொடுப்பதிலும் கடனாளிகளாய் இருங்கள் என்றார். "அவர் தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம்" (1யோவா3:16).

பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க நாமும் ஒருவரிடத்திலொருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்.

தேவன் நாம் பாவிகள் என்றும் பாராமல் இவ்வுலகில் உள்ள ஒவ்வொருவரும், பாவத்திலிருந்து காக்கப்பட வேண்டுமென்று நம் பாவத்திற்கு பலியாக தம்முடைய சொந்த குமாரனையே கொடுத்துள்ளாரே! ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒரிவரிடத்திலுமில்லை. மேலான அன்பை தேவன் நம்மிடத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த அன்புக்கு ஈடாக நாம் எதை கொடுக்கமுடியும்? சொந்த குமாரனின் இரத்தத்தை நமக்காக கொடுத்த தேவனுக்கு நாம் கடனாளிகளாக இருக்கிறோம். அவரின் அடிமைகளாகிய நாம் மற்றொருவருக்கும் அடிமையல்ல.

அவரைப் போல நாமும் மாறவேண்டும் என்று விருப்பம் கொண்டதினாலே, ஜீவனை கொடுக்கக்கூடிய அன்புள்ளம் கொண்ட கடனாளியாய் இருங்கள் என்கிறார். தகப்பனையாவது தாயையாவது என்னைக் காட்டிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்கு பாத்திரன் அல்ல என்றார் இயேசு மத்தேயு10:37. தன் ஜீவனை பாவிகளுக்காகக் கொடுப்பதிலும் மேலாக அன்புகூர ஒருவனாலும் கூடாது என்பதை தெளிவுபடுத்துகிறார். பிரியமானவர்களே, நாம் எவ்வளவு அன்பு கூர்ந்து மற்றவரை நேசித்தாலும், ஆபத்து என்று வரும்போது விலகி கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்றோம். சமீபத்தில் நடந்த சம்பவம் என் நினைவுக்கு வருகிறது நெருங்கிய உறவு கொண்ட இரு குடும்பத்தார் குடும்பத்தில் ஏற்பட்ட சில பிரச்சினைகளின் காரணமாக பிரிந்து வாழ்ந்து வந்தனர். அந்த சமயத்தில் ஒரு குடும்பத்தில் உள்ள சிறு குழந்தை, தாய் கவனிக்காத சமயத்தில் அருகில் இருந்த சிறு கிணற்றில் அருகில் தவழ்ந்து வந்ததை மற்றொரு குடும்பத்தார் பார்த்துவிட்டு, அதன் தாயிடத்தில் கூறாமல் வெளியூர் புறபட்டு சென்றுவிட, குழந்தை கிணற்றின் விழுந்து நீண்ட நேரம் யாருமே பார்க்காததால் குழந்தை இறந்து விட்டது குழந்தையின் பெற்றோர்கள் எல்லா இடங்களிலும் சோகத்தோடே தேடி அலைந்து பார்த்தார்கள். பேருந்து நிலையத்தில் புறப்பட நின்ற இவர்களிடம் விசாரித்த போது

உண்மையை தெரிந்து, இறந்த குழந்தையை மீட்டெடுத்தனர்.

உலகத்தில் உள்ள மக்களிடம் உள்ள அன்பு இந்த மாதிரிதான் உள்ளது. நாம் நல்ல அன்போடு நேசிக்கிறவர்களிடத்திலும் சிறு குற்றங்கள் காணப்படுமானாலும் கோபித்து கொண்டு அன்பு செலுத்தாமல் பிரிய நேரிடுகிறது. உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள் என்று மத்தேயு5:44 வாசிக்கின்றோம். இயேசுவும் சிலுவையின் கடைசி நேரத்தில் பிதாவினிடத்தில் 'பிதாவே இவர்கள் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாது செய்கிறார்கள் இவர்களை மன்னியும் என்று வேண்டிக்கொண்டார். தன்னை பகைத்தவர்களையும் எவ்வளவாய் அன்பு கூர்ந்து நேசித்தார்!

இந்த இயேசு நமக்குள்ளாக இருப்பேன் என்கிறார். எவ்வாறு என்று பார்க்கும் போது 1யோவா.4:12-ல் தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை. நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார். அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்.

நாம் மற்றவரிடத்தில் அன்பு கூரும்போதுதான் தேவன் நமக்குள்ளாக வாசஞ்செய்கிறார். அவர் செய்த காரியங்கள் நம்மில் வெளிப்படும். ஒருவருமே காணாத தேவனில் நாம் அன்பு செலுத்தும்போது அவர் நமக்குள்ளாக தங்கும்படி செய்து விடுகிறோம். எவ்வளவு மேலான ஒரு சத்தியம்! உண்மையாக அன்பு செலுத்தும்போது பயம் நம்மை விட்டு அகன்று போகிறது, பாவம் இல்லாமல் போகிறது, தேவன் வந்து தங்கும்படியான இருதயமாக மாறிவிடுகிறது. பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும் அன்பு சகல பாவங்களையும் மூடும் என்று வேதம் சொல்கிறது. தேவன் அன்பாகவே இருக்கிறார்.

### வேதஅறிவுப்போட்டி எண் 62-ல் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| P.அலிஸ்மேரியம்மாள் | -வதிலை | N.டேனியேல் | |
| Mrs.செல்விராஜா | -கோவில்பட்டி | தமிழ்வாணன் | -மேல்விஷாரம் |
| J.ஜாய்வாசுகி | -கோவை | H.வித்யாராணி | -சென்னை |
| Mrs.குளோரிபெளல்ஜர் | -சென்னை | A.பரசுராமன் | -கோவை |
| R.ராமதாஸ் | -சென்னை | P.S.லலிதாபிரேம குமாரி | -மதுரை |
| S.தண்டபாணி | -சிலுவத்தூர் | G.ஜெபாஸ்டின் | -திண்டுக்கல் |
| V.கோவலன் | -மதுரை | G.கிரேஸ்ஜெயா | -வெள்ளகுளம் |
| Mrs.கிலாடிஸ்சேவியர் | -கடலூர் | K.கோமதி | -க.பாளையம் |
| J.நிர்மலாஜான் | -மதுரை | Mrs.ஜாஸ்மின்வின்சென்ட்ராஜ் | -மதுரை |
| D.யேசுதாஸ் | -சித்தூர் | J.தீமோத்தேயு | -சேலம் |
| E.பீட்டர்சாலமோன் | -கோவை | R.டைட்டஸ் | -சென்னை |
| P.முத்து | -பொன்னபுரம் | A.டென்சிங்மனோகர் | -மதுரை |
| A.சேவியர்மேரி | -மதுரை | | |

சிறுவர் பகுதி

# பொய் தீர்க்கதரிசி

வேத பகுதி: எரேமியா28:1-17



பழைய ஏற்பாட்டு புத்தகத்திலே அநேக தீர்க்கதரிசிகளைக் குறித்து படித்தும், கேள்விப்பட்டும் இருப்பீர்கள். எரேமியாவின் நாட்களில் அனனியா என்கிற ஒரு தீர்க்கதரிசியுமிருந்தான். அவனோ எரேமியாவின் வார்த்தைக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொன்னான். என்னவென்று கேட்கிறீர்களா?

இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், பாபிலோன் ராஜாவின் நுகத்தை முறித்தேன். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இவ்விடத்திலிருந்து பாபிலோனுக்குக் எடுத்துக் கொண்டுபோன கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளையெல்லாம் நான் இரண்டு வருஷகாலத்திலே இவ்விடத்துக்குத் திரும்பக் கொண்டுவரப் பண்ணுவேன் என்று கர்த்தருடைய ஆலயத்திலே ஆசாரியர்களும் சகல ஜனங்களும் பார்த்திருக்க எரேமியாவை நோக்கி சொன்னான்.

எரேமியாவோ நான் அவைகளை விசாரிக்கும் நாள்வரைக்கும் அவைகள் அங்கே இருக்கும்; பின்பு அவைகளைத் திரும்ப இந்த ஸ்தலத்திற்குக் கொண்டுவரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று முன்னமே சொல்லியிருந்தான். அனனியாவோ இரண்டுவருஷகாலத்திலே இவ்விடத்துக்கு வரும் என்றான். தீர்க்கதரிசி சொன்னபடி நடந்தால் அவனே மெய்யான தீர்க்கதரிசி அனனியா சொன்னபடி நடக்கவில்லை திரும்பவும் கர்த்தர் எரேமியாவோடே பேசி: நீ போய், அனனியாவை நோக்கி: நீ மரநுகத்தை உடைத்தாய்; அதற்குப்பதிலாக இருப்பு நுகத்தை உண்டுண்ணு என்று கர்த்தர் சொன்னார். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சாரைச் சேவிக்கும்படிக்கு இருப்பு நுகத்தை இந்த எல்லா ஜாதிகளுடைய கழுத்தின்மேலும் போட்டேன் என்றான். அனனியாவோ பொய் சொன்னதினால் அவ்வருஷத்திலே ஏழாம் மாதத்திலே செத்துப்போனான். பொய் சொன்னதாலே அவனுக்கு மரணம் வந்தது கர்த்தர் சொல்லாத காரியத்தை கர்த்தர் சொன்னார் என்றால் இப்படித்தான் சம்பவிக்கும். ஆகையால் நீங்கள் பொய் சொல்லாமல் தேவசமூகத்தில் உண்மைபேச கற்றுக்கொள்ளுங்கள்.

**மனப்பாட வசனம்:**

"அவர்கள் என் நாமத்தைச் சொல்லி உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள்; நான் அவர்களை அனுப்பினதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா29:9).

## வேத அறிவுப் போட்டி எண்-63

*போட்டியாளர்கள் கவனத்திற்கு,*

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும்.*

1. இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்: அப்பொழுது அகங்காரிகள் யாவரும், அக்கிரமஞ்செய்கிறயாவரும் எப்படியிருப்பார்கள்?
2. ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் எப்படிப்பட்டவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள்?
3. கர்த்தர் நீதியுள்ளவர்; அவர் அநியாயஞ்செய்வதில்லை; அவர் குறைவில்லாமல் காலைதோறும் தம்முடைய எதை விளங்கப்பண்ணுகிறார்?
4. நீங்கள் என்னிடத்தில் கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே யாருக்கும் உண்டு என்று பவுல் எழுதுகிறார்?
5. இதோ, ஜல்லடையினால் சலித்தரிக்கிறதுபோல் இஸ்ரவேல் வம்சத்தாரை எல்லா ஜாதிகளுக்குள்ளும் சலித்தரிக்கும்படிக்கு நான் கட்டளையிடுவேன்; ஆனாலும் எது தரையிலே விழுவதில்லை?
6. பொய்யுரையாத தேவன் ஆதிகால முதல் எதைக் குறித்து வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிறார்?
7. தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க எப்படிப்பட்டவராயுமிருக்கிறார்?
8. நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட பழமொழி மெய்யான பழமொழியா?
9. பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள்; அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் என்ன செய்கிறார்?
10. எனக்கு யாரை நிகராக்குவீர்கள், என்று எவர் சொல்லுகிறார்?

## நடப்புச் செய்திகள்

- சென்னை உள்பட 6 இடங்களில் உள்ள அரசு கலைக்கல்லூரிகளில் செயற்கைகோள் கல்வி வசதி இம்மாதம் முதல் தொடங்கப்படுகிறது.
- ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு நிவாரணக்குழு அமைக்க விவசாயிகள் சங்கம் கோரிக்கை.
- தூக்கு தண்டனை ஒழிப்புக்கு மத்திய அரசு எதிர்ப்பு.
- செல்போன் வாகன விற்பனையில் உலகளவில் இந்தியா புதிய சாதனை.
- ஆஸ்திரேலிய கிரிக்கெட் போர்டுக்கு புதிய சேர்மனாக கிரேக் ஓகானர் நியமிக்கப்பட்டுள்ளார்.

Owned and published by B.Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202 Editor: **B.Arjunan.**

Registered with Registrar of Newspapers for India under No.TNTAM/2000/3629
Postal Registration. No. TN/SR-164/2003-2005 Lincensed to Post without prepayment
License No.TN/WPP-25/SR/2003-2005 Posted at Batlagundu Post Office on 10th Nov. 2005.



எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கிறோம்.

**கிறிஸ்துவின் சபை**

17.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202
திண்டுக்கல் மாவட்டம்.
போன்: 04543-263278 செல்: 9443558041
E-mail:arjunglory@yahoo.co.in



"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32)

'ஒரே வழி' தபால்வழி வேதபாடதிட்டம்

**The Master Course**

தமிழில்
இருபது வயதிற்கு மேற்பட்டவர்கள்
இன்றே ரூ.15/- செலுத்தி
இப்பாடத்திட்டத்தில் சேர்ந்து ஒரு வருடத்தில் முடித்து
Certificate பெற்றுக்கொள்ளுங்கள்

**THE ONE WAY**
**BATLAGUNDU BIBLE COLLEGE**
P.O. Box.5, BATLAGUNDU - 624 202
S.INDIA



**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**

மாத இதழின் ஆண்டு சந்தா
இந்தியா –ரூ.50/–
வெளிநாடு – ரூ.500/–
தனிப் பிரதி – ரூ.5/–

## Monthly Magazine

**To**

**From**

Editor
THE WORD OF CHRIST
P.O.Box.No.5
Batlagundu - 624 202
S. India